செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

நாள்: 20.12.2024

# தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் கொற்றவை

**பயிலரங்கம் – 18**
**(27.01.2025 – 05.02.2025)**

உலகத் தொல்குடி மாந்தர் இனத்தில் தமிழினம் தனிச்சிறப்பு மிக்கதாகும். தமிழர்கள் தாம் வாழ்ந்த நிலத்தின் தன்மைக்கேற்ப நிலத்தினை ஐவகையாகப் பிரித்து, அதற்கேற்ப கருப்பொருள், உரிப்பொருள் முதலியவற்றை வகைப்படுத்தினர். இவ்வைந்து நிலங்களில் பாலை நிலமானது ஐந்தாவது திணையாகக் கருதப்படுகிறது. "முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" என்று சிலப்பதிகாரம் பாலை நிலத்திற்கு இலக்கணம் கூறுகிறது. குறிஞ்சி, முல்லைத் திணைகளில் மழை பொய்த்த பின் அத்திணைகள் தன் இயல்பிலிருந்து திரிந்து வெம்மையான பாலை நிலமாக மாறும். இத்தகைய பாலை நிலத்தின் தெய்வமாகக் கொற்றவை தமிழ் இலக்கியங்களில் அடையாளப் படுத்தப்படுகிறாள். "ஓங்குபுகழ் கானமர் செல்வி" என்று அகநானூற்றிலும், "பெருங்காட்டுக் கொற்றவைக்குப் பேய் நொடி சொல்வதுபோல" என்று கலித்தொகையிலும், "கொற்றவை சிறுவ", "பழையோள் குழவி" எனத் திருமுருகாற்றுப்படையிலும் கொற்றவை வழிபாடு குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தின் காடுகாண் காதையில் கொற்றவைக்குக் கோவில் இருந்தமையும், அக்கொற்றவையின் தோற்றம் குறித்தும் பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. இவ்வாறான தமிழ் இலக்கியத் தொடர்ச்சியில் இத்தெய்வமானது போர்த் தெய்வமாகவும் வீரர்கள் வழிபடும் தெய்வமாகவும் காட்டப்படுகிறாள். அந்தவகையில் கலிங்கத்துப் பரணியில் கொற்றவையான காளி உறையும் இடமாகப் பாலை நிலம் காட்டப்படுகிறது. பாலை நிலத் தெய்வமான காளியின் கோவில் அமைப்பு, காளியின் தோற்றம் முதலியன சிறப்புற

வருணிக்கப்பட்டுள்ளன. மேலும் போர்க்களத்திற்குரிய தெய்வம் காளி என்பதைக் குறிக்கும் வகையில்,

“பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே எங்கே யென்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்”

என்னும் பாடலானது போரில் கலந்துகொண்ட தன் கணவனைத் தேடிவந்த பெண்ணொருத்தி, காளியிடம் முறையிடுவதைக் காணமுடிகிறது. இவ்வாறு பாலை நிலத் தெய்வமாகத் தமிழ் இலக்கியங்களில் போற்றப்பட்ட கொற்றவை இன்றுவரை தமிழரின் வழிபாட்டு மரபில் ஊர் எல்லைத் தெய்வமாகவும், ஊர்க் காவல் தெய்வமாகவும் வழிபடப்படுகிறாள்.

தமிழ் இலக்கிய மரபில் தொடர்ச்சியாகப் போற்றப்பட்டு வரும் தொல் தெய்வமான கொற்றவை குறித்து ஆய்வு மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் **“தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் கொற்றவை”** என்னும் பொருண்மையில் 27.01.2025 முதல் 05.02.2025 வரை பத்து நாட்கள் பயிலரங்கினை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கில் தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் கொற்றவை குறித்த சிந்தனைகளை ஆராய்ந்து விளக்கும் வகையில் இத்துறை சார்ந்த பேரறிஞர்கள் ஆய்வுரை நிகழ்த்த உள்ளனர். தமிழரின் வழிபாட்டு மரபு குறித்து ஆய்வு மேற்கொள்ளும் தமிழியல் மாணவர்கள் (முனைவர் பட்ட ஆய்வாளர்கள்) இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெறலாம்.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- ❖ பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 40.
- ❖ பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 27.01.2025 முதல் 05.02.2025 வரை பத்து நாட்கள்.
- ❖ பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 1.00 மணி & பிற்பகல் 2.00 - 5.00 மணி.
- ❖ பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

❖ பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.

❖ பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.

❖ பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழி விண்ணப்பத்தை நிறைவு செய்து இணையத்தின் வழி அனுப்பவும்.

❖ இணையவழி விண்ணப்பம் https://forms.gle/BqzJHGHR1v8PEXWG8 என்ற இணைப்பின் வழியாக அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR-code) மூலமாகக் கிடைக்கப்பெறும்.

❖ பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.

❖ பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 08.01.2025. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 09.01.2025 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் 38 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டது.

**இயக்குநர்**